எஸ்சி எண்204/2016 ரவிக்குமார் (அசா9) தேதி:02.08.2023

சாட்சி மனுவின் மீது மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

என்னுடைய மேல்அதிகாரி கிராம நிர்வாக அலுவலர் ஆவார். அதற்கும் மேல் வட்டாட்சியர் இருக்கிறார். எங்கள் அலுவலகத்தில் நான் எங்கு செல்கிறேன் என்ற விவரம் குறித்த பதிவேடு பராமரிக்கப்படுகிறதா என்றால் அவ்வாறு பராமரிக்கப்படவில்லை. சம்பவ இடத்தில் உள்ள வீட்டு கதவு எண் எனக்கு தெரியாது. மேற்படி வீடு தெற்கு நோக்கி வாசல் உடையது. மேற்படி சம்பவ இடத்தின் அருகே வீடுகள் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். தள்ளித்தள்ளி இருக்கிறது. எங்கள் அலுவலகத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 90 மீட்டர் இடைவெளி இருக்கும். எங்கள் அலுவலகம் காலை 10.00 மணியளவில் திறக்கப்படும். எங்கள் அலுவலகத்திற்கு விடுமுறை என்பது கிடையாது. எங்கள் அலுவலகத்திற்கும் சங்கரலிங்கபுரம் காவல் நிலையத்திற்கும் சுமார் 3 கி.மீ இருக்கும். எதிரியை எனக்கு தெரியும் அவருடைய குடும்ப வரலாறு எனக்கு தெரியாது. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும். மேலும் என்முன்னிலையில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சா.பொ.1 மற்றும் 2 இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேலும் அசாஆ.3 கைப்பற்றுதல் மகசர் இந்த வழக்கிற்காக தாயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 23.08.2015 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதால் நான் அலுவலகத்திற்கு வரவில்லை என்றும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் அலுவலகத்தில் வருகைபதிவேடு பராமரிக்கப்படவில்லை. அன்றைய தேதியில் நானும், கிராம நிர்வா அலுவலரும் அலுவலகத்தில் இருந்தோம். மேற்படி நான் 23.08.2015 அன்று அலுவலக பணிக்கு வந்ததாக எந்த ஆவணங்களும் முன்னிருத்தப்படாத சூழ்நிலையில் என்னுடைய சாட்சியம் நம்பத்தகுந்ததல்ல என்றால் சரியல்ல.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்

சார்பு நீதிபதி,

கோவில்பட்டி.